14

பாட்டு
பக்கங்கள் 35

வர்ம மாரங்கள் 100

820

பீரங்கி.100.

எஸ்சையல் ப.ஆசீர்வாதம் படித்து வருகின்ற

வர்ம சாஸ்திர ஏடு.

1915 நவம்பர். மருத்துவர்.

திருமுரு கைந்தன் பாதம்
    சென்னியி லேந்திக் கொண்டு
கருவுரு நூ லை யானும்
    காசினி தனிலே வின்ன
பெருகநா ல் சொல்ல வில்லை
    பேவியே யிந்த நூ லை
பருகியே சித்த ரெல்லாம்
    பார்த்தென்னை மகிழ்ந்தா ரய்யா. 1.

மகிழ்ந்தென்னை புகழ்ந்த போது
    மாமலை யதனில் சென்று
அகன்றருப் புவியின் கண்ணே
    யாருமே அறிய வென்று
புகழ்ந்துயான் இந்த நூ லை
    பூதல மெங்கு மெய்க்க
புகழ்ந்தமாய் பீரங்கி யென்று
    சொல்லுவாள் கும்பை யோனே. 2.

பக்கம்.ஆ. கும்பயோன் சொன்ன போது
குழைமுள்ள குமார வேலு
அம்பற்கே யல்லா லருங்கே
யாருக்கும் ஆகா தென்று
தம்பமாம் பீரங்கி னூ லை
தானவர் கண்டெ டுத்து
எம்பெரு மானுக் கென்று
பீரங்கினூ லை யெடுத்து வைத்தார். 3.

வைத்ததோர் னூ லை தானும்
மாதவன் பார்த்தெ டுத்து
எத்திசை யாரும் காண
யிந்தநூ ல் கொடுக்க மாட்டேன்
சித்தர்கள் ஆர்க்கு மல்லால்
சொல்லாதே சுருதி மார்க்கம்
பத்தருக் காகு மல்லால்
பாவிகளுக் (கர்கா) தென்றே. 4.

ஏடுஎண். 2 என்றதோர் னூ லைத் தானும்
இவரெல்லாம் ஒத்து கூடி
மன்றிலம் மானிடர் தம்மால்
வருகும் வருமங்களுக் காக
கன்றினில் சுரவி போலே
காலங்க ளதிலே சென்ற
சென்றவர் இளக்கும் மார்க்கம்
செய்கையும் செப்பு வேனே. 5.

பக்கம். ஆ. செப்புவேன் பிரங்கி நூலு
சகதல மெல்லா மெய்க்க
தப்புதல் வாராம் வண்ணம்
சாத்தியம் அசாத்தியம் சொல்ல
இப்புவி யோர்களுக் காக
இணங்கவே சொன்ன நூலும்
அப்படி யான நூலை
யாருக்கு மாகு மன்றே. 6.

ஆகுமே வர்மத்தின் வகைக் கெல்லாம்
அடங்குமோ பாவி அடங்காத சொன்னேன்
தாகுமே வர்மமொரு நூற்றெட் டுக்கும்
ஏடுஎண். 3 தலமதனை பிரித்துரைக்கும் சார்பை கேளு
யாகுமே கண்டத்தின் மேல தாக
எழுந்தவர்மம் இருபத்தைந்தும் இயம்பக் கேளாய்
புகுமே உலகத்தில் பெரியோ ரன்று
புகழுவார் பொருளறியார் புல்லர் தாமே. 7.

பக்கம். ஆ ஆமென்ற சிரசுநடு கொண்ட கொல்லி
அதிலும்பின் னோட்டையில்கீழ் சீறுங் கொல்லி
ஓமென்ற அங்குலமே நாலின் கீழ்
பிடரிவர்மம் உச்சியின் எட்டுவிரலின் - கீழ்
ஆறிவர்மம்
தேமென்ற ஒருவிரல்கீழ் பொறசை காலம்
கீழ்பிறை குற்றிக்காலம் செவிநிமு தண்டருகில்
காமென்ற செவிகுற்றி கால மாமே
காதின்முன் ரண்டிறை பொய்கை-காலமாமே.

8.

ஏடுஎண்.4 காலமாம் கடைக்கன் இறையின்கீழ் நச்சேத்திர
காலம் கீழாண்டிறை காம்பூரி காலம்
காலமின் வலதிறை மூன்றுள்ளாய மூர்த்திக்
காலமதின் அரையிறையின்கீழ் திலர்த காலம்
காலமென்ன அரையிறையின்கீழ்
கருதுகின்ற மின்வெட்டி கால மப்பா
காலமாம் கருவிழியருகில் மந்திர காலம்
கருதும் இருபுறமும் கண்டு பாரே. 9.

பாரப்பா நெற்றிநடு நேராம் வர்மம்
பகரும்அரை விறையின்கீழ் பட்சி வர்மம்
பாரப்பா நாசிநடு கன்னாடி கால
மகண்ட தன்மையாம் பால வர்மம்
கூரப்பா கோண வர்மம் சென்னியின்கீழ்
நாலங்குலம் முதிர்கால மென்றே கூறலாகும்
ஆமப்பா கீழ்நாடி வெட்டு வர்மம்
அதின்நாடி யருகில் உறக்க கால-மாமே. 10.

ஆமப்பா குரவளை சங்குதிரிக் காலம்
அதின்கீழே அங்குலம் நாலாம் செமைவர்மந்தாணி
ஓமப்பா கண்டத்தின் மேல தாக
உச்சிமுடி யிருந்த எல்லையோடு கண்டுதேறே
தாமப்பா வர்மமது இருபத் தைந்தும்
தெரிந்துரைத்தோம் உச்சிதொட்டுக் கண்ட மீதில்
வாமப்பா வர்மமது நாற்பத் தைந்தும்
வகைதொகையாய் அதின்விபரம் வழுத்தக் கேளாய்
11.

வழுவில்லா தோளில்-ரண் டங்குலம் நாக
மருவுமே காக்கட்டை காலந் தாகும்
தழுவில்லா தொண்டையின்கீழ் அங்குலம் நாலில்
தகம்பெறவே கதிர்வர்ம காலந் தாகும்
எழுவில்லா சத்திகாறே எல்லின் கீழே
ரண்டிறையில் திலவிளை வர்ம மாகும்
கழுவில்லா தோரிறையில் வலமேந்திர காலம்
கவனமா யிருபுறமும் கண்டு பாரே. 12.

கூறியதோள் கீழ்கழு கூட்டின் மீதே
கொடியபிற நாரைகீழ் குத்து வர்மம்
மாறுமோலை கண்ணருகில் யிறைகீழ் அறுமார்
முட்டியில் கும்பு வர்மந் தானே
மாறுப முன்றிறைகீழ் பள்றி-வர்மம் கீழிருவிரல்
மண்டலமேல் நாலங்குல மடைப்ப காலம்
தெறுமுண்டெல்லுவர்மம் கீழிருவிரல் பெரியஅத்திச்
சுருக்கி இருவால்கீழ் சிறியஅத்திச் சுருக்கி 13.

சுருக்கியின்மேல் நால்விரலின் சுருதி வர்மம்
இருந்துண்ணும் பள்ளத்தில் பள்ளவர்ம மாகும்
வருக்கிய ஈரெட் டெல்லிரும் உடல்சுருக்கி
வர்மம்(தோ) வர்மத்தில் (நோ) தும்மிக் காலம்
கருக்கிய தும்மியின்மேல் நாலிறைகீழ் காக
கெட்டை காலம்மேலிரு சடைப்பெறை காலம்
யிருயிறை மீது கிளிப்பிறைக் காலமின்
ரண்டிறைமேல் கிளிமேக வர்மங் காணே. 14.

காணரிய திவளைநீர் முறுகில் புண லக்காலம்
    கால மிருபுறமும் கூருதல் வேண்டும்
நாளும் மூலதண்டில் நடேகிலு வர்மம்
    நலுக்கியதிற் கச்சை கால மென்னார்
தோளும் திண்மேல் கைகூட்டி காலம்
    குறுரெட்டைக் முனையும் வாசு காலம்
தாணுறவே வர்மமது நாற்பத் தைந்தும்
    தலந்தனையும் பிரித்துரைத்தோம் தகமை தானே. 15.

தகையாத நாவிமுதல் மூல மட்டும்
    சார்ந்ததகை ஒன்பதுக்கும் தலத்தைக் கேளு
மகிழ்கொப்புள் கீழ்விரல்நாலில் மூத்திரம் வீசும்
    மாத்திரை கல்லெடை காலம் மைத்தல்-டத்தில்
மகிழும் வலமோதிறையில் வலம்புரி யிடம்
    புரிவர்மம் எல்லுருமி வல்லுருமி நாங்குற்றி காலந்தானும்
மிகுநா லங்குலமே ஆனிவர்மம் அரையிறையில்
    மீதே தொந்தை வர்மமென விளம்புவாரே. 16.

வழுகாமல் மணிக்கட்டின் கீழ் மொழிப்பிறை காலம்
    தெட்சிணை காலம்யதனில் ஓரிறை சுண்டோதிரிவர்மம்
தழுகாமல் விரல்கிடை சுண்டோதரியாம் கங்கை
    வெள்ளைவர்மம் மணிக்கட்டில் மார்பந்த காலம்
தழுகாமல் அங்குலநாலில் ஆந்தை வர்மம்
    முட்டுக் குழிமடக்கில் முட்டு வர்மமென
புகலுவார் கைத்தவளை நடுமுன் டகத்தோள்
    புசமதினில் சவ்வுவர்மமென புகல லாமே. 17.

ஆமென்ற பாதமதில் நடுஉள் ளங்கால்
வெள்ளை வர்மம் உப்புகுற் றிகாலம்
வேமென்ற பாதவிரல் மொழிகுண்டி காலமென
கூறும் பெருவிரல் லாண்டிறை மேலாகும்
காமென்ற வீரத்திக்காலம் சுண்டன் குலத்தின்
மேலோன் டதனில் சுண்டோதிரி வர்மம்
நாமென்ற சுண்டோதரி வர்மம் மிதில்
பட்டவர்மம் கண்ணுறக்க கால மெள்ளே. 18.

காலமாம் விடுநரம்பு குதிகால் வர்மம்
கண்குதிரை முகக்காலம் முட்டு வர்மம்
சாலமாம் தொடைநடு உச்சிக் காலம்
தவறாமல் நூற்றெட்டுத் தலமும் கண்டு
கோலமுடன் வகுத்துரைத்த பீரங்கி நூற்றில்
கூறுமது காலத்தின் குணங்கள் தன்னை
தாலமதில் உரைத்திடும் நல்பொருள தாக
சார்ந்திருக்கும் ஆதார தலத்தில் நின்றே. 19.

தாராக தலைமுடிந்த கொண்ட கொல்லி
தலைக்கேடு வந்திடுகில் குணத்தைக் கேளு
சீராக கண்ணடையாது தளர்ந்து போகும்
செய்யும் உ[illegible]போகம் விழுந்து போகும்
பாராகும் சன்னி சிலேற்பனந்தான் வந்து
பழிகேடு செய்துவிடும் பழிகா ளப்பா
காராடு வர்மமது கொண்ட போது
கைகடந்த உயிரெனவே கண்டு கொள்ளே. 20.

கொள்ளவே யின்னுமொரு சீமக் கொல்லி
    கொண்டவுடன் தலையுருட்டு குறிதா னப்பா
தன்னுவாம் நரைகாலும் குறக்கு ணும்
    தாக்கு மப்பா நாக்கதனை உள்வ-லிக்கும்
அள்ளுமப்பா பிடரிவர்மம் குணத்தைக் கேளு
    அடித்தவுடன் கண்சிறம் நாக்கு தள்ளும்
பள்ளமெனவே அடங்கலில் பார்க்கச் சொல்வோம்
    பாங்கான நாழிகைதான் இருபத் தைந்து. 21.

தானான சுருதிவர்மம் குணமே தென்றால்
    தலையுருட்டும் பனிகுளிரும் அடிக்கும் பாரு
மானான கடிகையது பதினெட் டுக்குள்
    பார்த்திடவே சாத்தியமாம் பதன மாக
பூனான பொறசையென்ற காலந் தானும்
    புகையுமடா கண்ணிரண்டும் புகைச்சல் காச்சல்
கானான பொகைகுத்து புருவம் சீம்
    கடிகைதான் அறபதுகழிந்தால் சாத்தியம் சொல்லே 22.

சொல்லுமே குத்தி-காலமது கொண்டு தானால்
    சுழலுமே சரீரமது துடிக்கும் பாரு
பல்லுமே விழிரண்டு மடைத்திருக்கும் கன்னல்
    பத்தொன்பதுக்கு முறைபார்த்து நோக்கு
கொல்லுவது செவிகுத்திக் காலம் கண்டு
    கோணிவாம் முக்கில்ரத்தம் கொப்ப ளிக்கும்
முல்லையுடன் மயங்கும் இருபத் தொன்பக்குள்
    முன்னாக மிளக்குமந்த முறையைப் பாரே. 23.

பாரப்பா யின்னுமொரு பொய்கை காலம்
　　பட்டவுடன் மயங்கிவிழும் பதன மாக
சீரப்பா நாழிகைதான் அம்பத் தொன்று
　　சென்றவுடன் பிணிதீர்ந்து சுகமாய்த் திரிவார்
காரப்பா நச்சேத்திரக் காலங் கொண்டால்
　　கண்ணிரண்டும் சிவந்துமுகங் கோணும் பாரு
ஊரப்பா உடல்தடிக்கு வாய்நீ ரோடும்
　　மாற்றமுறை பதினெட்டுக்குள் வகுத்துக் காணே. 24.

காணவே காம்புரி காலங் கொண்டால்
　　கடிவிடங்கள் கொண்டதுபோல் கண்கா ணாது
ஊணவே மயிலி மத்திப் பிட்டால்
　　விட்டுவிடும் கண்புகைச்சல் நாழிகை எட்டுக்குள்ளே
வாணவே வலமூர்த்தி குணமே தென்றால்
　　வழுந்துவாய் உள்குத்து மயக்க மாகும்
பூணவே அரத்தைசிறு புள்ளடிவிட் டரைத்து
　　பூசிடவே குத்துவலி புகைச்சல் போமே. 25.

புல்லுவாம் அஸ்வான காலங் கொண்டால்
　　கல்லவரும் அம்பத்தெட்டுக்குள் மயக்க முண்டாம்
கலியாடும் மயங்காம லிருக்கும் பாரு
　　கலங்காதே கைமுறை செய்து பாரு
அலையாமல் திலதா காலங் கொண்டால்
　　அன்றிமிர்ந்து அஸ்வாந் திருக்கும் வாய்பிளக்கும்
விலகாமல் கடிகையது மூனே முக்கால்
　　விட்டுவிட்டால் சாத்தியமாய் மீளா தன்றே. 26.

மீளவே மின்வெட்டி காலங் கொண்டால்
    மேகத்தைப் பார்க்கும்வலம் பிடித்தக் கொள்ளும்
தாளவே வலிக்குமது பீசத் தோடே
    தாள்பிடிக்கும் சாத்தியமாம் இன்னும் கேளு
தோளுவிலா மருபுறமும் கொண்டால் குத்த
    கொளுத்துவலி கண்கசம் மயக்கங் கொள்ளும்
கொள்ளமுர்து தைலமது சிரசில் போட்டால்
    கன்னவிரு நாலுக்குள் கரணை யாமே. 27.

கருதிய மந்திரகாலந் தன்னைக் கேளு
    கருத்துடனே உடல்மயங்கி விழுமே கன்னல்
பாருமே ஐந்துக்குள்ளே எழுந்து பேசும்
    மூக்குள்ளே நேர்வர்மம் கொண்டு தானால்
தாருமே விம்மிழகஞ் சீறிமூச் சடைக்கும்
    தலையுருட்டுஞ் சரீரமெல்லாம் சீறி காணும்
பருதியென சன்னிவந்து சிறேற்ப வந்தால்
    பழிகேடு செய்துவிடும் பண்பு பாரே. 28.

பாரேநீ பட்சிவர்மம் கொண்டு தானால்
    பண்பான அளவுரண்டு மொதுக்கிப் போடும்
வாரான வாய்துவும் பூண்டு கோணும்
    அலைகொதுக்கும் வஸித்துவா யகலும் பாரு
தாரான கண்ணாடி காலங் கொண்டால்
    மயங்கிவிடும் தேகமது தளர்ச்சை மெத்தை
ஈரான இருசெவியோ டிருநாசி யோடே
    ரத்தம்வரும் கண்ணடைக்கும் இயல்பால் பாரே. 29.

பாரப்பா பாலவர்ம முதிர் சன்னி
　　பாராட்டும் குணங்கள்வலி கொடுத்த குத்து
சீரப்பா குறிகுணங்கள் பிழைத்த தானால்
　　மீளாது வெகுகடினம் மெய்தான் சொல்வேன்
பூரப்பா கோணவர்மம் கொண்டு தானால்
　　தாடையொரு பக்கம் கோணும்முகம் வேர்க்கும்
ஊ ரப்பா தாக மிகுதி யுண்டால்
　　சுக்கிட்டு வெந்நீர் கொடுக்க சுகந்தாமே. 30.

நாமென்ற முதிர்காலந் தன்னைக் கேளு
　　சன்னிதா னெழும்பிவிடும் நாடி சாயும்
வாமென்ற தலைவ லிக்கும் கடிகை பத்தொன்ப துக்குள்
　　வர்மஞ் சொன்னோம் ....
ஓமென்ற வெட்டுவர்மம் கொண்டு தானால்
　　ஓகோகோ நாடிரண்டும் பூண்டுக் போகும்
ஆமென்ற நாழிகைதா னெட்டு சென்றால்
　　சாத்தியமாம் இதுகுறியை அறிந்து நோக்கே. 31.

அறிவான உறக்கமென்ற காலங் கொண்டால்
　　ஆள்மயங்கும் விழிமூடும் அலகு பூட்டும்
தறிவான கடிகைதொன் னூா று சென்றால்
　　தானேதான் எழுந்திருக்கும் சடவில் லாமல்
பொறியான சங்குதிரி கொண்டு தானால்
　　பொருந்துவிடும் முகந்திருப்பி பார்க்கும் பாரு
அறிவான அடிவழிமு கணக்கும் சொல்வேன்
　　கையுடனே செய்முறையைக் கண்டு நில்லே. 32.

கண்டிடவே சிமைவர்மம் கொண்டு தானால்
    கருதியே வாயிலது நொரைபதையுந் தன்னும்
கொண்டிடவே வர்மமது இருபத் தைந்தும்
    குறிகுணங்கள் தனையுரைத்தோம் குறிய தாக
மன்றிடவே கண்டத்தின்மேல் வந்த வர்மம்
    வளமாகத் தனையறிந்து பகுத்துப் பார்த்து
விண்டிடவே விளக்குமுறை அடங்கல் தன்னை
    விபரமுடன் நா லறிய விளம்பு வோமே. 33

ஓமென்ற உச்சிதனில் முடியை தாந்து
    உள்தாரை பிறதாரை தடவி ஏந்தி
ஆமென்ற நாடிதனை ஏந்திக் கட்டி
    அப்பனே பிடரியிலே சாந்தி செய்தால்
ஓமென்ற செவிரெண்டும் ஊதிக் கொண்டு
    உள்ளே ரண்டுவிரல் அசவு கட்டி
தாமென்ற எல்லில் கைகொண்டு சாரே
    தடவிடவே ஜீவன்வந்து தயங்கும் பாரே. 34.

பார்க்கவே தைலமொன்று சொல்லக் கேளு
    பரிவான நல்லெண்ணெய் நிம்ப எண்ணெய்
ஏற்கவே சமனான மிளகு சுக்கு
    வெள்ளுள்ளி வசம்பு கஸ்தூ ரி மஞ்சள்
கார்க்கவே கரிய-சீரகம் தேவ தாரம்
    கச்சோலம் சாதிக்காய் சமன தாக
வார்க்கவே எண்ணைதனில் பொடித்துப் போட்டு
    வெந்து வடித்ததனை விதம்போல் செய்யே. 35.

விதமான கண்டத்தின் மேல்நின்ற வர்மம்
    இருபத் தைந்தும் விபரஞ் சொன்னோம்
இதமான போதலமும் குணமும் சொன்னோம்
    திரும்பவே மீண்டும்வகை அடங்கல் சொன்னோம்
பதமான தைலத்தின் பாகம் சொன்னோம்
    பாக்கியமே உள்ளவாக்கு பலித மாகும்
இதமான யூந்திவர்மம் நாற்பத் தஞ்சும்
    முறையதா யிதனைநீ யறிந்து பாரே. 36.

பாரப்பா காக்கட்டைக் காலந் தானும்
    பட்டவுடன் ஆள்நிமிரும் கொகுத்தும் கைகால்
வாரப்பா கடிகையி ரைந்தக் குள்ளே
    மருகுன மறிந்து மறுகாலம் நோக்கு
காரப்பா கார்கதிர் வர்மம் கொண்டால்
    கண்ணிரண்டும் தள்ளுமடா கக்கல் விக்கல்
சீரப்பா கண்டிடவே கடிகை மூன்று
    சொல்லாது அசாத்தியமாம் தெரிந்து கொள்ளே. 37.

தெளிவான கதிர்வர்மம் கொண்ட போது
    செம்குணமே தேகமது குளிரும் சன்னி
மொளியாத வலியுடனே சீத முண்டாம்
    முறட்டைவிடும் மெழுகடிகை முடுகிடாது
எளிதான குத்துவர்மம் மூலமுதல் வாயால்
    ரத்தம்விழும் மூத்திரத்தில் ரத்தங் காட்டும்
வளியாக முன்னும் பின்னு மடைத்து மூடி
    வயறூ தும் கடிகை கடவாதே அசாத்தியமே. 38.

சாத்தியமாம் சத்திவர்மம் கொண்டு தானால்
தளைகுணம் உடலும் தளர்ச்சை யாகும்
பார்த்திடவே சன்னிவரும் சுவாசம் நேரே
யீயாது சலித்துவிம்மி பதைக்கு மப்பா
வேர்த்திடவே விழியிரண்டும் மயங்கும் போது
மரணமுடன் சுழியதுபோல் மாகு மெல்ல
தேர்த்தியதோர் குறிகுணங்கள் தன்னை ஆய்ந்து
திடமறிந்த இதன்பொருளை தெளிந்து பாரே. 39.

பாரடா திவளைவர்ம மதுவே கொண்டால்
வாயிலேதான் பதைதள்ளும் மூக்கின்நீர் பாயும்
வாரடா மயங்கிவிட்டால் கடிகை பத்து
மயங்காம லிருக்குமானால் வரிசை கேளு
பூரடா சில்லிருமல் கூடிக் கூடி
உண்டாகும் இருபுறமும் ஒருபோல் கொள்ளில்
சாரடா யோந்தீர மாட்டாது சொல்லோம்
சயமுறிந்த சடுதியிலே சாவான் காணே. 40.

காணுமே யேந்திகாலம் சன்னி சீதம்
கைகளைப்பு கரத்தியுண்டாம் செவிகே ளாது
வாணுமே யேழு கடிகைக்குள்ளே பாரு
வலக்கரத்தில் கொள்ளில் பெருச்சல்மாறா தென்றேன்
நீணுமே பிறதாரை காலங் கொண்டால்
கழுத்து நெடிதாமும் பதப்பிலே வலிக்கும்
கேளு மன்றறிவு அழியும் சீக்கரத்தில்
விளங்குமே மர்முறைகள் வியாதி நோக்கே. 41.

ஆகவே யிழுத்தவர்மம் கொண்டு தானால்
அதசரீரம் இடுகிடென்று ஆடு மப்பா
நாகமது போல்காரித் தப்பும் பத்து
நாளைக்குள் தீராவிட்டால் நம்ப வேண்டாம்
தோகைதனைத் ஞா சிக்கவே கொண்டு தானால்
சோரைவிழும் வலசல மடைத்துக் கொள்ளும்
சாகமற கழுத்து வீங்கும் தண்ணீர்
தாகமுண்டால் பதினொன்று தப்பா தன்றே. 42.

என்றுமே மார்வர்மம் கொண்டால் கேளு
எனிநால செவிட்டிலதை குன்றும் போது
மன்னவே கைகாலும் குறுகும் சொன்னோம்
மந்திபோல் தேகமது வளைவ தாகும்
பன்னவே யிருபுறமும் ஒத்துக் கூடி
பாரிலே கிராணி நோய்பதம் பாரே
இன்றுமே குறியறிந்து செய்தா யானால்
எழுந்தபிணி தீர்ந்துபோகும் இயல்பு தானே. 43.

இயல்பாக கும்புவர்மம் கொண்டால் கேளு
ஈரலது முன்றேமுக்கால் கடிகை நேரம்
கயல்போலே தடிக்குமடா கறுக்கு ஈரல்
கனமாக பெருகிவிடும் முடிப்புப் தாகும்
மயலான செவியடைக்கும் வாய்மூடிப் போகும்
மைந்தனே பலப்பல குணமுண் டாகும்
வெயலான காலமது கடின மப்பா
மீளாத கைமுறைகள்விரைந்து பாரே. 44.

பாரப்பா நேர்வர்ம மதுதான் கொண்டால்
    பதறியே மயங்குமுடல் குளிர்ந்து போகும்
ஆரப்பா நாழிகைதா னிருபத் தொன்பதுக்குள்
    உதிபுட விளக்கிவிடும் உயிர்தான் மீளும்
பாரப்பா காலமிச்ச மாகக் கொண்டால்
    வருத்தமடா பலரோகம் கொடுத்து வாழ்வு
கூறப்பா வயிர்மந்திக்கும் ஊன்செல்லாது
    குறிகுணத்தால் ஆராய்ந்து மருந்து செய்யே. 45.

செய்யவே பன்றிவர்மம் கொண்டு தானால்
    பன்றியது போலுமி அலறுஞ் சொல்லோம்
அய்யமே கடிகையது இருபத் தெட்டில்
    அடங்கலது பார்த்திளக்க அசாத்தியஞ் சாராது
பொய்யடா பக்ககாலம் உடல்வெ றுத்து
    தண்ணீர்போல் குளிருமே கைகால்கள் முதிர்ந்து (கல்லல்)
கொய்யுமிரு பக்கத்தால் மூச்சு கொள்ளில்
    பலநோய்கள் கைகாலில் தானுண் டாமே. 46.

உண்டான முன்டெல் வர்மம் கொண்டால்
    உளற்றவே மயங்கிவிடும் உண்மை யாக
தண்டான சீதமொடு தளர்ச்சை யுண்டாம்
    தவறாது இன்னுமொரு குறியைக் கேளு
முண்டாமல் சிலமத்திடுவில் ரத்தங் காணும்
    முக்கியமாய் காலமது உச்சங் கொள்ளில்
வண்டாமே பலபிணிநோ யுண்டா மெள்ளே
    வருத்திடு-முன் உரைத்தவள(மை) உண்மை தானே. 47.

வளமையாம் பெரியஅத்தி சுருக்கி கொண்டால்
　　மைந்தனே உடல்கூனி குறுகிப் போகும்
அளமேயென்ன அறிவழிந்து செய்யா தேநீ
　　அட்டபதி ரெண்டெட்டிலும் விடீமுன் டாக்கி
துளமேயென்ன கடிகை பதினொன்-முக் குள்ளே
　　துஞ்சிடுமே சிறியஅத்திச் சுருக்கி கொண்டால்
முளமேயென்ன வர்மம்ரெண்டும் குவமொன் றாகும்
　　இளக்கிடிலும் மண்டலத் திறப்ப தாமே. 48.

ஆமென்ற மின்சுருதி வர்மங் கொண்டால்
　　அடிவயிறு வலிகொடுத்து இளப்புச் சன்னி
ஓமென்ற பாதாதி எஞ்சாணுடம் பெல்லாம்
　　வீக்க முண்டாம் பொன்று போலே
சாமென்ற சாகாத மூலி யப்பா
　　காசினியில் அமுர்த-வள்ளி யென்று பேரு
வேமென்று பறித்துவந்து கசக்கி தேகம்
　　மிதிடலே ஓடிவிடும் வின்னொன் னாதே. 49.

விள்ளாதே மின்வழுந்தால் காலங் கொண்டால்
　　மெய்கனிந்து பிறமொதுக்கி ரீ வலிக்கும் பாரு
முள்ளாக பெருச்சலமோ கைகா லெல்லாம்
　　முதிர்ந்துபோகும் சன்னிவரும் சாத்திய மாகும்
உள்ளாபள்ள வர்மம் கொண்டு தானால்
　　உடல்குன்றும் வயிறுகுன்னி பிடிக்கும் பாரு
கொள்ளுமே யிதெல்லாம் முதுகாந் தரை-உள்
　　கொஞுத்து வந்திடுமே காலங்கொண்டா லென்னே. 50.

கொண்டதோ ருடல்சுத்தி வர்மன் கேளு
    கொண்டவுடன் வயிறூதம் வாய் விம்மும்
விண்டவுடன் உள்ளிருக்கும் நோயுங் காட்டும்
    வெகுநாளாம் குறிகுணங்கள்தோன்றி டாமல்
கண்ணடைக்கும் மஞ்சசைக்கும் நடுக்கம் கூடும்
    கைகால்க ளயர்ந்துவிழும் கடிதாய் விழும்
வன்மைமுத்தும் கபிலமதில் நீரி ழப்பு
    உருத்தமிழு குறிகுணத்தை வகுத்துப் பாரே. 51.

குத்தும்-தும்மிக் காலமிதில் குணத்தைக் கேளு
    கொண்டவுடன் மலம்விழும் கூறுங் கீறும்
பத்தியுட விளக்கிவிட்டு யிளக்கா விட்டால்
    பதினெட்டு நாழிகைக்குள் பறக்கும் சீவன்
அத்துமே சாத்திய மானாலும் கேளு
    ஆனந்த வாய்வின்றி சார முண்டாம்
பித்திடவே பின்சொல்வேன் பதிபந் தன்னை
    பெருநோவு சயநோவு விளங்கும் பாரே. 52.

புள்ளவே கைகால்கள் கொள்ளு தாளால்
    புயம்விழும் மதிமயங்கும் போதக் கேடாம்
உளைக்கவே சடப்பிற காலங் கொண்டால்
    உடல்மயங்கும் கண்விழித் திருக்கும் கண்ணல்
வளைத்த பதினைந்துக்குள் இலக்கா விட்டால்
    மாறுமே வலிகுடலில் வாய்வுண் டாகும்
விளைக்கவே முன்கட்டி கூறை பார்த்து
    மெய்யான கிருதமெண்ணெய் தயிலங் கொள்ளே. 53.

கொள்ளவே கிளிப்பிறை காலந் தானே
    கோவிரு சிரிசிரிக்கும் வாய்பே சாது
மள்ளவே கொண்டவுடன் மயங்கி டாது
    மைந்தனே கடிகை பதினெட்டாம் பாரு
கிள்ளவே கிளிபேக வர்மந் தானும்
    கொண்டவுடன் கூவென்று கூவுங் கூவும்
மெள்ளவே மதிமயங்கி கடிகை நாலில்
    வீறுவிட்டு பதினெட்டில் இளகும் பாரே. 54.

கும்பியே புனா கிவர்மம் குணமே தென்றால்
    கொண்டவுடன் மதிமயங்கி மயக்கந் தீரும்
நம்புமே குற்றமது செய்யும் செரிக்வோம்
    நாள்செல்ல குணக்கேடு வந்த தென்றால்
வம்பிலே விழுந்ததுபோல் நரம்பு கூடி
    வலுவாக இரு அந்த புசமும் வீழ்ந்து
தம்பமே சன்னியொடு கைகால் கோச்சி
    சரீரமதை ஒருபக்கம் ஒடுக்கம் தானே. 55.

தானான வரலாறு அறிந்து வர்ந்து
    தவறாமல் மருந்துசெய்தால் பிணிகள் நீங்கும்
ஊனான இருபுறமும் ஒருபோல் கொள்ளில்
    கூர்ந்துசெய் வாய்வுபத்தும் அடைத்துப் போகும்
கோனான சீத முண்டாம் கொகுந்து வலி
    சயன் கூடும் இதன்குறிகள் குவந்தைப் பார்த்து
வேனான மருந்தேது செய்தா லந்தாக்
    மீளாதென் றுலகிதனில் விள்ள லாமே. 56.

ஆமப்பா நட்டெல்லு வர்மம் கொண்டால்
அகங்குரகும் கூழம் நடுக்கச்சி யுண்டாம்
வேமப்பா கொக்கர் வாதத்தில் கொண்டு
என்னெயுடன் தைலமது விளர்ந்து பார்த்து
ஏமப்பா என்னெய்விட்டு சிகிச்சை செய்துகொள்ளே
இயல்பாக கச்சைவர்மம் கொண்டால் கேளு
தாமப்பா இருபதிலே உளைச்சல் உண்டாம்
தம்பிக்க மலசலமே தளர்ச்சை யாமே. 57.

தளைத்தகைக் கூட்டுக்காலம் கையு மிருந்து
தாகுப மதிமயங்கும் பல்லிரண்டு சென்றால்
விளைத்திடவெ சாத்தியத்தின் குணமே யாகும்
வேண்டியதோர் பரிஹாகம் செய்து பார்நீ
அழைத்தவாய்வு எட்டில் முனைமீதே
அடித்திட்டால் காச்சல் குளிர்பிணி யுண்டாகும்
பிழைத்திடவே வாய்வுகுன்றும் பிறந்தால் கேளு
இருபிறமும் ஒருகுணமும் இசைந்து பாரே. 58.

பாரப்பா அடங்கல்தன்னை சொல்லக் கேளு
பரிகுருவை அநுதினமும் பணிந்து போற்றி
பேரப்பா தடவுமுறை பேசிச் செய்து
பிறமிருந்து எல்லுமுறை பெருக்கிப் பார்த்து
வாரப்பா நரம்பெல்லாம் வலித்துப் பின்னி
வாங்கியே தடவிவிட்டு முன்னும் பின்னும்
ஊரப்பா செவிகுழியில் ஊனி எந்தி
உள்தாரை பிறதாரை தடவி கூரே. 59.

தடவியே வலஞ்கையை வலத்தே கெட்டி
    தவறாமல் இடதுகை இடத்தை கெட்டி
மடவியே முன்னும்பின்னு மறிந்து கெட்டி
    வாங்கியே சட்டத்தில் சவுட்டிக் கொண்டு
உடவியே வலஇடமும் திரிச்சுக் கட்டி
    ஓங்கியே உதறிவிட தீரும் பாரே
சிடம்தன்னில் இடுவதற்கு தைலம் சொல்வேன்
    சேறுதென்று எண்ணாதே செகத்தில் செய்யே. 60

செய்யவே தைலமது செப்பக் கேளு
    சிறப்பான நல்லெண்ணெய் படிதா னொன்று
எய்யவே பசுவுநெய் படிகா-லாகும் நிம்ப
    எண்ணெயுடன் நிசாங்குநீர் படியதொன்று (தேங்காய்)
உய்யவே அதிமதுரம் கிராம்பு முத்தம்
    உற்பனமாம் சாதிக்காய் தாளிச பத்திரி
வெய்யவே அரைப்பலமே அரைத்துக் காய்ச்சி
    வடித்து-அருந்த பிறத்துவிடு வரிசை யாமே. 61.

வரிசையாய் கண்டமதில் நாசி மட்டும்
    வகுத்ததோர் வர்மமது நாற்பத் தஞ்சும்
பரிசையாய் நரம்பதுதான் வெவ்வே றாக
    படுதலமு முறுகுணமும் பகர்ந்த தெல்லாம்
கரிசனையாய் இளக்குமந்த அடங்க லோடு
    கைமுறையும் செய்முறையும் கண்டு கூறி
பிரியமாய் தைலமதைப் பிரிந்துச் சொன்னோம்
    பொய்யென் றெண்ணாதே பொருந்திச் செய்யே. 62.

என்னெறிய மூத்திரகாலங் கொண்ட போது
    எண்ணாதே மூதத்திரங்கள் கழிந்து போகும்
புண்ணில்லா பால்சுரு சுரென மோகும்
    பண்பாக தள்ளிருள்ளி யாகப் போடும்
விண்ணில்லா ஈரெட்டு நாழி கைக்குள்
    கல்லெடைக்காலம் உடல்வேர்த்து குளிர்ந்து ஊர்க்கும்
மண்ணில்லா திரிகடிகை எழுமுன்மைக்குள்
    மறுகாலந் தனையறிந்து பார்த்து நோக்கு 63.

மறுகியே வலம்புரி காலங் கொண்டால்
    மழுவு செறநீர்ப்பதி கழியா தப்பா
நெறிவியே வயறு ஊம் காலி ரண்டும்
    நிமிர்ந்துபோம் கைக்கடங்கி நின்றி டாது
நறுகியே இடம்புரி கொண்டு தானால்
    தண்டுவலி உளைவுகுத்து சரீரம் சீறும்
அசகு-சிறு நீரொழுகும் பேதி போகாது
    அதடுத்தடங்கால் பார்த்துநீ விளக்கிக் கொள்ளே. 64.

அட்வாக வெல்லுறு முகிவல் லும்மி
    அன்னரம்பில் தாவிக்கொண்டால் அடிவயிற்றில் வாய்வு
உடவாக தரிப்புளைவு சன்னி சீத
    முண்டாம் மண்டையிலே மரு முண்டாம்
புடமான அமிர்தமது கலங்கி மெத்த
    போதக்கேடு பித்தரைப்போ லாட்டு மப்பா
திடமாக நரம்பிறுடை கூற தன்னை
    தெளிவாகச் சொல்லிவிட்டோம் தெளிந்து பாரே. 65.

உற்றிடவே நால்கு குற்றிக் காலம்
    வீங்குமடா சரீரமெங்கும் மூச்சே றாது
நட்டிடவே முறைக்குமுறை செய்யா தேநீ
    சாத்தியமென் றெண்ணாதே அசாத்திய மாகும்
அட்டிடவே அணிவர்மம் கொண்டு நாளால்
    அகம்முறிந்து ரத்தம்பாய்ந் திறந்து போகும்
தொட்டிடவே வேண்டாங்காண் அசாத்தி யந்தாள்
    சொல்பிரம நாதாவரிசும் மீனா தென்னே. 66.

எண்ணவே ஆந்தைவர்மம் கொண்டு நாளால்
    இயல்பாக செய்குணத்தை இயம்பக் கேளு
அண்ணவே தளர்ச்சையுண்டாம் உணர்வுண்டாகும்
    அடுத்தடுத்து போதம்வரும் போதக் கேடாம்
புண்ணவே சாந்தமது ஏழாம் நாளில்
    உச்சியது மயக்கம்விடும் புகழ்ந்து கேளு
உண்ணவே வர்மமது ஒன்ப தக்கும் (குணம்)
    உத்தமனே அடங்கல்தன்னை உற்றுக்கேளு. 67.

உற்றுநீ அடங்கலது சொல்லக் கேளு
    உறப்புடனே சவட்டுமுறை-அடக்கிச்-செய்து கீழ்நோக்கிக்
                கூவிக் கொண்டு
அற்புடனே சவட்டுமுறை அடக்கிச் செய்து
    அதின்மேலே நரம்பிளக்கி வலித்துப் பின்னி
ஒற்றதோர் காவிரண்டும் திரிச்சுக் கட்டி
    உள்தாரை குறுக்கடக்கி புகந்து செய்து
எற்றதோர்க் கச்சையது குறுக்கிச் செய்ய
    இயல்பாகக் கீழ்நோக்கி யிட்டுக் கட்டே. 68.

கட்டியே இருபுறமு மசைவு மீட்டு
    களமாகவே யதனை யிறுகச் செய்து
திட்டமுடன் ஈரடங்கல் தலத்தி லாக்கி
    சேர்சன்னி அடங்கலிலும் திடமாய்ச் செய்து
கட்டாய-மா யிந்த-உயிர் நிரு மப்பா
    கைமுறைகள் தவறாமல் கருதிப் பாரு
வட்டமிட்ட குருவருளை மனதி லெண்ணி
    வர்மமது ஈரடங்கலிலே வழியாய்ச் செய்யே 69.

செய்யவே எண்ணெய்தின் விபரந் தன்னை
    செப்புகிறேன் நல்லெண்ணெய் படிதா னொன்று
பையவே ஏரண்ட எண்ணெய் பாதி
    பண்பான பழச்சாறு விட்டு மத்தி
நெய்யதனைச் சூரியனில் வற்றக் காய்ச்சி
    நீர்சுண்டினால் வடித்துக் குப்பிக் கேற்று
எய்யவே நெய்யறிந்து விதம்போல் செய்ய
    ஏற்றபிணி சுகமாகும் மையல் கண்டாய். 70.

கண்டிடவே நாவிமுதல் மூல மட்டும்
    கலந்தவர்மம் ஒன்பதையும் கருதிப் பார்த்து
கொண்டிடவே போதவமும் குறிகு ழமும்
    குறிப்பாக அடங்கல்முறை யிளக்கும் பாகம்
விண்டிடவே தைலமதின் விபரந் தானும்
    விரித்துரைத்தேன் எக்கரத்தில் ஏழு ரண்டும்
மண்டிவிறை குணமதனை இதின்மேல தாக
    வன்மையாய் வழுத்துகிறோம் மகிழ்ந்து கேளே. 71.

மகிழ்வான மொழியுடனில் வாலங் கொண்டாக்
    மைந்தனே மொழிகளைத்தக் களைப்புண்டாகும்
திகழவே தரிப்புளச்சல் வீக்க முண்டாம்
    தெட்சணக் காலமது செப்பக் கேளு
களவே சாத்தியமாம் களைப்பு நோவு
    கன்புகையும் சன்னியொடு சீதமுண்டாம்
தகழவே திகம்நாவில் மரண மாகும்
    தனிவாக செய்குணங்கள் சூட்சம் பாரே. 72.

சூட்சமாம் சுண்டேதிரி குணமே தென்றால்
    தடிக்கும்பார் சரீரமெங்கும் வீக்க முண்டாம்
வாய்ச்செம்யாம் சொல்லுகிறேன் விரும்பிப் பார்க்க
    விசைகொழுடு கோணும்பார் பதினொன் றாம்நாளில்
ஞாசீசியாம் சுண்டோதிரி குளிர்வெ தப்பு
    பனிவிலக்கி கைகாலும் தடித்து வீங்கும்
காச்சியதோர் குறிங்கள் தன்னைக் கண்டால்
    கைமுறையாம் தைலமிட்டுத் தடவிக் கொள்ளே. 73.

நடவிமகா மதில்வெள்ளை வர்மம் கொண்டால்
    தவறாது களைப்புடனே தரிப்பு ளச்சல்
வடவியே சுரமுடனே புகைச்ச லுண்டாம்
    மாறிவிடு மெட்டாநாள் வரிசை யாக
கடவியே மணிமந்தம் வர்மம் கொண்டால்
    கைகளைப்பு வீக்கமுண்டாம் குளிருந் தேகம்
அடவிய தைலமிட்டு தடவிக் கொண்டு
    அடவாக விளக்குமுறை செய்து பாரே. 74.

கொள்ளவே ஆந்தைவர்மம் குணத்தைக் கேளு
கொண்டவுடன் களைப்பிளகி வீங்கிப்போகும்
முள்ளவே முன்சொன்ன தைல மிட்டு
முறைபோலே தடவுமுறை செய்து பாரே
கள்ளவே முடக்குவர்மம் வீக்க முண்டால்
களைப்பிளகி கைகால்கள் களைப்பு குத்து
தள்ளவே தைலமது போட்டு நன்றாய்த்
தடவியே இளக்கிவிடு சாத்திய மாமே. 75.

சாத்தியதோர் முண்டத்தில் முறிந்து தானால்
சாகாமல் கால்களைப்பு நோவுன் டாகும்
பத்தியதோர் சன்னியோடு குத்த முண்டாம்
பெருநரம்பு யிளக்கி யொருபிறம் வலிக்கும்
மாற்றியதோர் யிசைவுவர்மம் கொண்டு தானால்
வந்ததோர் புயம்விழும் களைப்புன் டாகும்
வாத்தியதோர் விசனமுண்டாம் வீக்கங் காணும்
வாராக ரன்டுகைக்கும் குணமி தாமே. 76.

ஆமப்பா அடங்கலது சொல்லக் கேளு
அப்பனே தடவுமுறை தடவிக் கொண்டு
தாமப்பா வலித்துருவித் தடவிக் கொண்டு
தறுகாமல் கையதனை நீட்டி யேதான்
ஏமப்பா கைக்குழியில் நரம்பி ளக்கி
இசங்வோ விரலெல்லாம் வலித்து விட்டும்
ஓமப்பா உள்ளடங்கல் முறையுஞ் செய்து 77.
உத்திவிடு தண்ணீரில் மூன்று நாளே.

முன்றான என்னையொன்று சொல்லக் கேளு
    முக்கியமாய் நல்லெண்ணெய் படிதா னொன்று
தோன்றாதே சம்பளசார் உழக்குக் கட்டித்
    துலங்கமோடு முத்தரைத்துப் போடு நீயும்
ஊன்றாதே அடுப்பேற்றி அனலை மூட்டி
    உறவான பதம்பார்த்து இறுத்து வாங்கி
தோன்றாத நரம்பிளக்க வேணு மென்றால்
    நுணுக்கமாய் என்னெயிட்டுத் தடவிப் பாரே. 78.

பார்த்திடவே ஈரேழு கரத்தி லப்பா
    பகர்ந்தஅடிப் போதலமும் செய்குணங்கள்
தீர்த்திடவே அடங்கல்முறை வி யான தெல்லாம்
    செப்பினோம் தைலமது தீர்க்கச் சொன்னோம்
வார்த்திடவே பாதமதில் ஐமுன் தான
    வர்மத்தின் போதலமும் இன்னுரைத்தோ மிங்கே
கோர்த்திடவே செய்குணங்கள் தானு மிப்போ
    கூறுவோம் நால்முறையும் கூர்ந்து கேளு. 79.

நாளான காலில் வெள்ளைவர்மங் கொண்டால்
    நரம்புவலி இடுப்புவலி மண்டைக் குத்து
பாழான தேகமது நிமிரவெட் டாது
    பாதமது களைப்பிளகி பனிரும் தேகம்
கோளான உப்புகுத்திக் காலந் தானும்
    கொண்டவுடன் மயங்கும் சாத்திய மாகும்
ஆளான காலமது கொண்டால் அடித்துடையோ
    டெதிர்த்து வலிக்கும் மெள்ள தானே. 80.

அரிதான குன்டெலிஃ காலங் கொண்டால்
அப்பனே மொழிபிசகும் களைப்புன் டாகும்
பரிதான விம்பம்போலே தரிக்கும் வீங்கும்
பாங்கான தைலமது விட்டுப் பாரு
வரிதான விரத்திவர்மம் கொண்டு தானால்
மைந்தனே களைப்புடனே சன்னி சீதம்
பெரிதாக தளர்ச்சையுண்டாம் மயங்கு பேதம்
பேணியே காலமுறை பிரித்துப் பாரே. 81.

பாராதே சுண்டேதிரி குணத்தைக் கேகு
பட்டுவுடன் களைப்பினகி விக்கல் உண்டாம்
வாராக முன்ருக்கு வயது கட்டி
வாராக எழுக்கும் மறக்கு மப்பா
சீராகப் பட்டவர்மம் கொண்டு தானால்
சிந்தைகேடு நரம்புவலி உளச்சல் வீக்கம்
ஆராக அத்தலத்தில் முறிந்து தானால்
அப்பனே காயமது ஆறா தன்றே. 82.

ஆறாத கண்ணுபுகை காலங் கொண்டால்
அப்பனே சீதம்வரும் வீங்கும் கைகால்
சாராகத் தடவி விட்டு முன்னே
தைலமது விட்டிடவே சாந்த மாகும்
தாராகத் தண்ணீரில் மூன்று நாளும்
தடவிவிட மாறிவிடும்
வீராக குதிவர்மம் கொண்டுதானா லுடல்மயங்கும்
விழும்விதன முண்டாகும் விரைந்து பாரே. 83.

விரைவாக குதிரைமுளை காலங் கொண்டால்
    மிக்கதோர் களைப்பிளகி வீங்கும் ஊதும்
தாராக சன்னிகொளுந்து சாவு காச்சல்
    தணுத்தவுடன் சூலைநீர் காட்டும் பாரு
பாராகப் பட்ட சூரணத்தை யுன்ன
    பத்திவந்த சூலைநீர் பறந்து போகும்
ஊராகப் பொருள்தனை விரித்துச் சொன்னோம்
    உத்தமனே பார்த்தறிந்து உகந்து செய்யே. 84.

உகந்திடவே முட்டுவர்மம் கொண்டு தானால்
    உத்தமனே சிரட்டையது நகண்டு போகும்
புகழ்ந்திடவே வீதனமது பொறுக்க வொண்ணாது
    போதமது கெட்டுவிடும் தளர்ச்சை யாகும்
மகிழ்ந்திடவே சிரட்டையது வலித்து நேரே
    வைத்துமேல் பசைபெருகப் பற்றுப் போட்டு
இகழ்ந்திடவே செய்து பின்னே எண்ணெய்
    இட்டு கைபாகம் விதமாய்ச் செய்யே 85.

கையான உறுமிவர்மம் கொண்டு தானால்
    கதித்திடவே கால்களைப்பு நோவுண் டாகும்
தய்யவே ஏழாம்நாள் சாத்திய மாகும்
    தூக்குமுறைக் காலமது மூவஞ் சுமே
வையகத்தில் பரணிவிட்டுத் தடவி னாக்கால்
    மைந்தனே தீராத பிணிக ளெல்லாம்
பைய்யவே தைலமது வடித்துப் போட்டால்
    பற்றியதோர் நோயெல்லாம் பறக்கும் பாரே. 86.

பகர்ந்திடவே தைலமொன்று பகரக் கேளு
பரிவான நல்லெண்ணெய் படிதா னொன்று
நிகர்ந்திடவே நிம்பஎண்ணெய் படிதான் காலு
நிகழ்படியே தழுதாழை சாறு கூட்டி
சிறந்திடவே சாதிக்காய் வசம்பு ஓமம்
சீராக ஏலமொடு தேவ தாரம்
உறந்திடவே வகைதனைக் களஞ்சு ரண்டு
சேர்த்தரைத்து பதம்பார்த்து வடித்துக் கொள்ளே. 87.

வடித்ததொரு தைலமதில் வசவுண் டாகும்
நரம்பு தெற்றலோடு முடக்குத் தீரும்
படித்திருந்த நா டிமுறையைக் கண்டு கொண்டு
பகர்ந்தபடி தைலமதைப் பரிந்து செய்தால்
பிடித்திருந்த நோய்கண்டு தலங்கள் கண்டு
பிசகாமல் இடத்திலுடைய பேதங் கண்டு
அடித்ததோர் கண்டமுந்தி மூலம் கைகால்
ஐந்துமிவை பிரிவையும் நீயறிந்து பாரு. 88.

பாரப்பா கேசாதி பாத மாறாம்
பற்றிநின்ற வர்மத்தை பகுதி செய்து
சீரப்பா பீரங்கி விரித்துச் சொன்னேன்
தீர்கொளும் திருப்புமுறை தைலப் போக்கும்
சேரப்பா கைமுறையும் செய்முறை யுந்தான்
செப்பினேன் இன்னுமொரு சூத்தி ரந்தான்
கூறப்பா வர்மத்தின் நரம்பி லப்பா
குறிகண்டால் குறிகுணத்தைக் கூறு வேன்நான் 89.

கூறுவேன் பெலத்தாள குளுமுடன்
    சூடுல் டாகும்
வீழுடன் சுமைகவங்கள் விக்கல
    மசத்தில் தாகம்
சீறிடா ஒட்டாதப்பா சுரமுடன்
    சன்னி தோஷ்ஷம்
நீறிடும் தேகமெல்லாம் நிமிரவும்
    குனியவொட் டாதே. 90.

ஒட்டவே சரவர்மம் உண்மையாய்த்
    தீர வென்றால்
பட்டிடா நிர்றசெள்ளை பரிந்தநெய்
    எள்ளி னெய்னெய்
கட்டிடா தேங்கா(ய்) என்னெய் கொண்டிடும்
    கைக்கு நாழி
விட்டிடா குன்றிதொட்டா வாடியும்
    விளவி சேரே. 91.

சேர்த்திடும் மனைத்தக் காளி
    சிறந்திடும் கண்டங் காரி
பார்த்திடும் தாளி யோடு
    பகர்ந்திடும் சாம நாழி
வார்த்திடா அரத்தை சிங்கி
    வளர்சீரக மதுர மாமே. 92.

ஆமெண மிளகு ரண்டும்
    அக்கிறா ஏலம் சுக்கு
தாமேறும் சாற்றின் மூலடும்
    தனிபலம் ஒன்று தாமே
வாமெனும் ஞா னி நீரில்
    வற்றியே நாழி யாக்கி
நீமெனும் கற்கம் ஒன்று
    கஞ்சியே அரைத்துச் சேரே. 93.

சேர்த்திடும் தானி யொன்று
    திறமுடன் கலந்து காச்சி
பார்த்திடு மகலப் பருவம்
    பதமுடன் வடித்து மைந்தா
எற்றிடும் நோயைக் கண்டு
    இணங்கியே கரண்டி நெய்யே
தீர்த்திடும் சர்வ ஜடும்
    நிமலனா ரரணைச் சொன்னேன் 94.

தைலம் சொல்வேன் முடங்கல்க் கெல்லாம்
    துரிதமாம் வசவென் ணெய்தான்
வெல்லவே சம்பள சாறு
    விரவியே குறத்திச் சாறும்
நில்லுமே ஏரண் டெண்ணெய்
    நிசமதாய் தேங்காய் நெய்யும்
அல்லுமே பாதாள மூலி
    அரகச ளாக வேந்தம் 95.

வேந்தமோ டெக்க சேர்த்து
வேவித்துத் தைலந் தன்னை
பந்தாயம் போட்டு மைந்தா
பார்முறி வதனில் விட்டால்
கைந்தநல பாதம் தானே
கருதினால் தீரு மென்று
உந்தனுக் குரைத்தே னப்பா
உகந்துநீ யறிந்து செய்வாய் 96.

வாய்த்திடு மோர்க்க காயம்
வகுத்தவே மாது சொல்வாள்
நேய்த்திடும் மாட லோடம்
நிறைபலம் நாறு மூலம்
செய்திடும் பானி நாடி
சேர்த்திடும் கஷாயம் வற்றி
பொய்த்திடா சோட யங்கள்
போவல திருக்கக் கண்டேன் 97.

கண்டத்தில் கருக்கு வெள்ளம்
கருதிடும் சோடா யந்தாள்
கொண்டிடா ரண்டு நீரும்
கூட்டி யொன்றாகச் சேர்த்து
விண்டதக் கோலம் கொம்பர்க்கு
விட்டிடா பலமஞ் சாகும்
மிண்டியிப் படிய தாக
மேவி யீராமு கொள்ளே. 98.

கொள்ளடா பத்தி யந்தால்
    கூர்மையாய்க் கடிலங் காத்தால்
தள்ளுமே தொல்லுமா ற் றாறில்
    வர்மத்தில் கொண்ட வீடு
விள்ளிடா வேண்டா மிந்த
    விதமுள்ள வித்தை யப்பா
கள்ளமென் றெண்ணா தேநீ
    கார்முனி லவர்க்குத் தானே. 99.

ஆணைசொல் வளமைக்குநீ
    அறிந்துமே நடந்தா யானால்
பேணியே செய்த தெல்லாம்
    பிசகாமல் பலிக்கும் சொல்லேன்
நீநிலந் தனிலே மக்கள்
    நிச்சய னா வி தெள்
பேணிய எந்தி சொல்லோம்
    பிசகில்லா னா மு முற்றே. 100.

கடவுள் துணை.

மாடலா டமென்பது - ஆடாதோடை
சோடாயம் - எட்டிலொன்று.

சிறிய சீனப்பாவு கஷாயம்

அதிமதுரம் - பலம்-4

கோட்டம் - பலம்-6

கொத்தமல்லி - பலம்-3

சீனப்பா - பலம்-6

கருவிலாஞ்சி - பலம்-7

அமுக்கிரா - பலம்-1

வில்வவேர்
குருந்தொட்டிவேர்
கருஞ் சூரை
கொடுவேலி
} - வகைக்குப் பலம் - 1.